ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்கள் கீழ் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள்.

255—(*வினா எண். 3848) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (ICDS) பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு 1–1-1985 முதல் ஊதிய உயர்வை வழங்குவதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருந்தும் தமிழக அரசு இந்தப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வை வழங்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதனை வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) அங்கன்வாடிப் பணியாளர்கள் மட்டுமல்லாமல் நம்முடைய முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திலும் இங்கே இதுபோன்ற பணிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய விகிதத்தை 1-1-1985-ல் இருந்து மாற்றி அமைக்கவேண்டுமென்று ஒரு தாக்கீதையும், அதைப்போலவே 1-7-1986-ல் இருந்து ஊதியத்தினை மேலும் மாற்றி அமைக்கவும் மற்றொரு தாக்கீதையும் மத்திய அரசு அனுப்பியிருக்கிறது. பின்னது அரசினுடைய நிதிநிலைக்கேற்ப நாம் செயல்படுத்துவதற்கு பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணியாற்றுகின்ற அங்கன்வாடி பணியாளர்களுக்கு மத்திய அரசு கொடுக்கின்ற அந்தத் தொகையை வைத்து தாங்கள் தரக் கூடாதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். அதேபோன்று முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திலும் பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றால், இவர்களுக்கும் வழங்க வேண்டி வரும். ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நான்காவது ஊதியக் கமிஷன் கூட இதுபற்றிச் சொல்லாவிட்டாலும், தமிழக முதலமைச்சர் அவர்கள் அமைப்பாளர்களுக்கு ரூ. 195 ஆகவும், ஆயாக்களுக்கு ரூ. 70 ஆகவும் உயர்த்தியிருக்கிறார்கள்.

திரு. ஆர். ரெங்கசாமி: தலைவர் அவர்களே, மாநில அரசு நடத்தும் திட்டங்களுக்கான உதவித் தொகையை உங்களுடைய நிதியிலிருந்து தரவேண்டும். ஆனால், மத்திய அரசு கொடுக்கின்ற சம்பளத்தைக் கூடத் தருவதில்லை. அதை உடனடியாகத் தரமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் மத்திய அரசுக்கு நாம் ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். பணியாளர் அமைப்பு, அதுபோன்று ஊதிய விகிதம், இவைகளையெல்லாம் அந்தந்த மாநில அரசு மட்டத்திற்கே விட்டுவிடவேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. 7 நிமிடத்தில் முடிக்கவேண்டும்.

தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்திற்கு தனியார் வழங்கிய நன்கொடை.

256—(*வினா எண். 7676) திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்குத் தனியார் வழங்கிய நன்கொடை எவ்வளவு (1984-85 ஜூன் வரை)?

(ஆ) அது எந்த அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு, ஏப்ரல் 1984 முதல் ஜூன் 1985 வரை தனியார் வழங்கிய நன்கொடை ரூ. 32,09,589.75.

(ஆ) இந்த நன்கொடைத் தொகை ஊராட்சி ஒன்றியங்களில் குழந்தைகள் சத்துணவுக்கூடங்கள் கட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய தொகையில், மிகப் பிரம்மாண்டமான ஒரு திட்டமாக சத்துணவுத் திட்டத்தைத் தமிழக அரசும், புரட்சித் தலைவர் அவர்களும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதிலே பணியாற்றக்கூடிய அமைப்பாளர்களுக்கு ஊதியம் மிகவும் குறைவு என்ற நிலை இருக்கிறது. அதை உயர்த்தித் தர ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஊதியக் கமிஷனிடம் நம்முடைய சத்துணவுப் பணியாளர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால், அந்த ஊதியக் கமிஷனின் பரிந்துரைகளிலே எதுவும் சொல்லா விட்டாலும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய நலன் கருதி அவர்களுக்குச் சம்பளத்தைத் தற்போது உயர்த்தியிருக்கிறார்கள்.